2017 மார்ச் 22]

67—

தொழிற்பேட்டை

***5053—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாநகரில் தொழிற்பேட்டைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலன் காக்க மானிடராய்ப் பிறந்து, வள்ளலாய் வாழ்ந்து, தெய்வமாய் மறைந்தும் மறையாமல் வாழ்ந்துவரும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவினை முதற்கண் போற்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

திருப்பூர் மாநகரில் தொழிற்பேட்டைகள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எத்தனையோ அரசியல் தலைவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். ஆனால், இந்தியாவிலுள்ள 29 மாநிலங்களிலும், அம்மா என்ற ஒரு வார்த்தையைச் சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) அது தமிழகத்தின் முதலமைச்சர் என்று சொல்கிற அளவிற்கு அனைத்து மக்களின் கவனத்தை ஈர்த்த வரலாற்றுத் தலைவி எங்கள் அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்கு அர்ப்பணித்த சாதனைத் திட்டங்களால் உலகமே வியந்து பார்த்த உன்னதத் தலைவி எங்கள் அம்மா என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர விரும்புகிறேன். மறைந்தும் மறையாமலும் தமிழக மக்களின் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் நினைவிடத்தை நோக்கி எனது பணிவான வணக்கத்தைச் செலுத்துகிறேன். அம்மா,

என் உயிர் மூச்சு உள்ளவரை உங்கள் நினைவு இருக்கும். ஒரு நாள் தங்களை நான் மறந்திருந்தால், அன்று நான் இறந்திருப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் புகழ் பாடுகிற வானம்பாடியாக, எளிய தொண்டனாக என்றும் பணியாற்றுவேன் என்ற உறுதிமொழியை மாண்புமிகு அம்மா அவர்களது திருமலர்ப் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையில், சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்ற அரிய ஆலோசனைகளை வழங்கியிருக்கிற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 'மக்களால் அரசு, மக்களுக்கான அரசு' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உறுதிமொழியை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கியிருக்கின்ற மாண்புமிகு கழகப் பொதுச் செயலாளர் மதிப்புமிகு சின்னம்மா அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்க விரும்புகின்றேன். எங்களுடைய சோதனைகளையெல்லாம் சாதனையாக்கி இங்கு அமர்ந்திருக்கின்ற கொங்கு நாட்டுச் சிங்கம், தமிழ்நாட்டினுடைய மதிப்புமிகு முதல்வர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய பணிவான நன்றி கலந்த வணக்கத்தினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகர் பகுதிகளில் பனியன் தொழிலில் ஏறத்தாழ 10 இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வசதிக்காகவும், இத்தொழில் மேலும் வளர்ச்சி பெற உதவும் வகையிலும், திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பூர் மாநகராட்சிப் பகுதியில் ஒரு புதிய தொழிற்பேட்டையை அமைக்க அரசு முன் வருமா என்பதனை மீண்டும் இந்தப் பேரவையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பெஞ்சமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ நிறுவனம் தமிழகத்தில் உள்ள

2017 மார்ச் 22]

105 தொழிற்பேட்டைகளை அதாவது, அரசால் அமைக்கப்பட்ட 35 தொழிற்பேட்டைகள் மற்றும் சிட்கோவால் அமைக்கப்பட்ட 70 தொழிற்பேட்டைகளை நிருவகித்து வருகின்றது. திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை பகுதியில் உள்ள குடிமங்கலத்தில் ஒரு மேம்படுத்தப்பட்ட தொழில் மனை மற்றும் 30 தொழிற்கூடங்களுடன் ஒரு தொழிற்பேட்டையும், பல்லடம் பகுதியில் உள்ள கணபதிபாளையத்தில் 53 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் மற்றும் 30 தொழிற்கூடங்களுடன் ஒரு தொழிற்பேட்டையும், திருப்பூர் வடக்கில் 5 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் மற்றும் 40 தொழிற்கூடங்களுடன் ஒரு தொழிற்பேட்டையும், திருப்பூர் ராசாத்தவலசுவில் 67 மேம்படுத்தப்பட்ட தொழில் முனையங்களுடன் ஒரு தொழிற்பேட்டையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ராசாத்தவலசு தொழிற்பேட்டையில் 37 தொழில் முனையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 30 தொழில் மனைகளை ஒதுக்கீடு செய்ய விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேலும், சிட்கோ நில வங்கிக்காக திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மைலாடி கிராமத்தில் 12.90 ஏக்கர் அனாதீனம் வகைப்பாடு நிலம் கண்டறியப்பட்டு அங்கு ஒரு புதிய தொழிற்பேட்டை உருவாக்க நில திட்ட அட்டவணை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நில உரிமை மாற்ற முன்மொழிவுகளை அரசுக்கு நில நிருவாக ஆணையர்மூலம் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எண்ணற்ற திட்டங்களை திருப்பூர் மாநகரத்திற்கு வழங்கியிருப்பதற்கு திருப்பூர் தெற்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் மாநகரம் எப்பொழுதும் கழகத்தினுடைய கோட்டையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. எங்களுடைய இதயக் கனியாகிய அம்மா அவர்களிடம் திருப்பூர் மாநகரப் பகுதிக்கான எங்களுடைய மேற்படி கோரிக்கையை பரிசீலிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு, நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

[2017 மார்ச் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கட்டமடுவு, பெரியகுளாப்பாடி ஆகிய இரண்டு ஊராட்சிகளிலும் தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே சிப்காட் வளாகம் அமைப்பதற்குப் போதுமான அளவிற்கு இடம் இருந்தது. கடந்த நிதிநிலை அறிக்கையின்போது, அன்றைக்கு ஊரகத் தொழில் துறை அமைச்சராக இருந்தவர், இந்த ஆண்டே அந்த இரண்டு இடங்களிலும் சிட்கோ வளாகம் அமைக்கப்படும் என்று உறுதியளித்தார்கள். கடந்த நிதியாண்டு முடிந்து, இந்த நிதியாண்டு நிதிநிலை அறிக்கையிலேயும் அது இடம்பெறவில்லை. அறிவிப்பு அறிவிப்போடு இருக்கிறது; பின்தங்கிய தொகுதியான எங்கள் செங்கம் தொகுதி மக்களுக்கு பணி வாய்ப்பை வழங்கக்கூடிய விதத்தில் இந்த அரசு உடனடியாகச் செயல்பட்டு, மேற்படி இடங்களில் சிப்காட் வளாகங்களை ஏற்படுத்தித் தருமா என்பதனை தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 முதல் 2017 வரை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசினால் அறிவிக்கப்பட்ட 29 புதிய தொழிற்பேட்டைகளில் 16 புதிய தொழிற்பேட்டைகள் 799.74 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டுள்ளன. எஞ்சிய 13 இடங்களில் 880.32 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பேட்டைகள் துவங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, நில உரிமை மாற்றம், நிலம் கையகப்படுத்துதல், வரைபடம் தயாரித்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன. இதில் திருவண்ணாமலை மாவட்டம், கட்டமடுவில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*